1978 செப்டம்பர் 1]

(ஆ) உறுப்பினர் திரு. மு. ஆறுமுகம் எதிர்க் கட்சித் தலைவர்கள் வரிசையில் அமர்ந்திருப்பது குறித்து.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, நேற்றும் இன்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சேலம் ஆறுமுகம் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அனுமதியைப் பெற்று அங்கே இருக்கிறார்களா அல்லது வேறு ஏதாவது புரமோஷன் பெற்றிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் சொல்லிவிடுங்கள். நான் சேர்த்துப் பதில் சொல்கிறேன். உங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரும் அதுதானே.

திரு. செ. சதாசிவம் : ஆமாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அச்சிடப்பட்டு உங்கள் கையிலே தரப்பட்டிருப்பதை தயவு செய்து பாருங்கள். அதிலே போட்டிருக்கிறது, அவர் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக அந்தக் கட்சியின் தலைவரும், அவரும் எனக்கு எழுதி அனுப்பியதையொட்டி அதுபற்றிய தகவலை ஒவ்வொருவருக்கும் அனுப்பியிருக்கிறேன். அதேபோல் நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையும், அமைச்சுச் செயலாளர்கள் நியமிக்கப் பட்டிருப்பது பற்றிக்கூட அச்சிட்டு மேசை மீது வைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இதில் ஒழுங்குப் பிரச்னை எழுவதற்கு நியாயம் இல்லை.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருநூற்றுமுப்பத்தைந்து பேர்களும் இப்படிக் கேட்கலாம், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நான் உங்களுடைய கட்சிக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்ற நேரத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பேன்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எந்த விதியின் கீழ் ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வருகிறீர்கள் ? நீங்கள் உட்காருங்கள்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : ஒழுங்குப் பிரச்னை என்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒழுங்குப் பிரச்னை எழாது. எழுத்து மூலம் அதற்கான விதியின்கீழ் கொடுக்க வேண்டும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். 92 (1) விதியின் கீழ். . . . . I oppose the introduction of the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : You are opposing, that is all. நீங்கள் பேச முடியாது.

திரு. க. சுப்பு : பேசலாம், விதியைப் படிக்கிறேன். நானே வாசித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியை நான் பார்த்து விடுகிறேன், உங்கள் வாசகத்தை நம்பி ரொம்ப நாள் ஆகிறது.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.